சுருக்கம்

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – தமிழ் நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற நலிந்த நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் – சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சாமி. திராவிட மணி அவர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.6,000/– வழங்க – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த்துறை

அரசாணை (நிலை) எண். 15

நாள்: 25.01.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043,
தை 11ம் நாள்
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.98, செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள் 17.04,1997
2. அரசாணை (நிலை) எண்.151, செய்தி மற்றும் சுற்றுலா (செய்திவெளியீடு)த் துறை, நாள் 13.07.2000
3. அரசாணை (நிலை) எண்.236, செய்தி மற்றும் சுற்றுலா (நிர்வாகம்–4) த்துறை, நாள் 03.10.2006
4. திரு. சாமி. திராவிட மணி, ஓய்வு பெற்ற பத்திரிக்கையாளர் அவர்களின் விண்ணப்பம், நாள் 2.8.2010
5. மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம் அவர்களின் கடித ந.க. எண்.98/ செமதொ/2010, நாள் 22.12.2010
6. அரசாணை (நிலை) எண்.293, த.வ.அ.நி.(ம) செ(நிர்.4)த் துறை, நாள் 16.07.2010.

------

ஆணை:

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் பத்திரிகைத் துறையில் நீண்ட காலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்ட பத்திரிகையாளர்கள், பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், அவர்களது சமூகப்பணியை கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதியுதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் அளிக்கும் வகையில் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

2) பார்வை நான்கில் படிக்கப்பட்ட விண்ணப்பத்தில் சிவகங்கை மாவட்டத்தில் விடுதலை நாளிதழில் பத்திரிகையாளராக 27 ஆண்டுகாலம் பணியாற்றி, பணியிலிருந்து ஓய்வு பெற்ற பத்திரிகையாளர் திரு. சாமி. திராவிட மணி அவர்கள் 2.8.2010 நாளிட்ட தனது விண்ணப்பத்தில், நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத்தை வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் இவர் பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார்.

3) திரு.சாமி திராவிட மணி, அவர்கள் ஓய்வு பெற்ற பத்திரிகையாளரின் விண்ணப்பம், 08.11.2011 அன்று அரசால் அமைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர்களின் ஓய்வூதிய பரிசீலனைக் குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பார்வை–5ல் படிக்கப்பட்ட கடிதத்தில், இவருக்கு ஓய்வூதியம் வழங்க சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்துள்ளார். அதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நலிந்த பத்திரிகையாளர்

த.பி.பா.,

திரு.சாமி. திராவிட மணி அவர்களுக்கு, ஆறில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாத ஓய்வூதியம் ரூ.6000/-(ரூபாய் ஆறாயிரம் மட்டும்) இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதற்கொண்டு வழங்க அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை 2011-2012-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்-60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் -102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் -I திட்டத்தில் சேராதது - AH தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம் - 27 ஓய்வூதியங்கள் - 05 சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்கள்"

(ததொ.கு.2235 60 102 AH 2750)"

5) சிவகங்கை மாவட்ட கருவூல அலுவலர் அவர்களுக்கு, மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ள மாத ஓய்வூதியத்தை திரு.சாமி. திராவிட மணி அவர்களுக்கு பெற்றுத் தர உரிய ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6) சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர், ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளரின் நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டாலோ அல்லது இயற்கை எய்தினாலோ, இது குறித்த முழுமையான அறிக்கையினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை-9 அவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை-9 அவர்களால் மேலே பத்தி 3-ல் தனியருக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ஓய்வூதியம் குறித்த விவரங்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 3101/ நிதி(த.வ.,அ.(ம)செ.துறை)/ 2012, நாள் 21.01.2012 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது .

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
திரு.சாமி. திராவிட மணி,
54/3, சண்முகம் தெரு, செக்காலை, காரைக்குடி,
மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கைமாவட்டம்,
ஆணையாளர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை-35
மாநில முதன்மை கணக்காயர், கணக்குகள் (ம) பணிவரவு) தமிழ்நாடு, சென்னை-18
மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை மாவட்டம்,
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை-18
மாநில கணக்காயர்,(கணக்குகள்) சென்னை-18.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நகல்: நிதி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை) சென்னை-9
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(வரவு செலவு)த்துறை, சென்னை-9
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின்
செயலர் அவர்களின் தனிச்செயலர், சென்னை-9
இ.கோ./உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்